### கோவை அரசு கலைக்கல்லூரி மாணவர்கள்

# மருதமலை வனப்பகுதியில் 500 கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் சேகரித்தனர்

கோவை,செப்.22– மருதமலை வனப்பகுதியில் இருந்து 500 கிலோ பிளாஸ்டிக் கழிவுகளை கோவை அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் சேகரித்தனர்.



மருதமலை வனப்பகுதியில் அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்த போது எடுத்தபடம்.

## மருதமலை கோவில்

கோவை மருதமலையில் சுப்பிரமணிய சுவாமி கோவில் அமைந்துள்ளது. அந்த கோவிலுக்கு தினசரி ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கிறார்கள். சாமி தரிசனம் செய்து விட்டு திரும்புபவர்கள், அங்குள்ள படிக்கட்டுகளில் அமர்ந்து உணவு பொருட்களை சாப்பிட்டு விட்டு, பிளாஸ்டிக் பைகள், தட்டுகள், தம்ளர்கள் மற்றும் உணவு கொண்டு வந்த பிளாஸ்டிக் பைகளை அங்கேயே வீசி விட்டு சென்று விடுகின்றனர்.

இதனால் மருதமலை வனப்பகுதியில் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. மேலும் பிளாஸ்டிக் கழிவுகளை உண்ணும் வன விலங்குகளும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் கோவை அரசு கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் (அலகு–3) சார்பில், மருதமலை வனப்பகுதியில் உள்ள பிளாஸ்டிக் பைகளை சேகரித்து அப்புறப்படுத்த திட்டமிடப்பட்டது.

## பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு

இதையடுத்து, 'பிளாஸ்டிக்கை ஒழிப்போம் பசுமை தேசம் காப்போம்' என்ற தலைப்பில் மருதமலை வனப்பகுதியில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடைபெற்றது. அதில் 150 மாணவ–மாணவிகள் பங்கேற்று, கோவில் வளாகம் மற்றும் மலையடிவாரம் வரையுள்ள சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பிளாஸ்டிக் பைகளை சேகரித்தனர். இதன்படி 14 மூட்டைகளில் 500 கிலோ எடையுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டன. அவை மறுசுழற்சிக்காக மருதமலை கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து முகாம் நிறைவு விழா நடைபெற்றது.

## கலந்து கொண்டவர்கள்

விழாவுக்கு பாரதியார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அரசு கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் கே.எல். மகேந்திரன் வரவேற்றார். விழாவில் சமூக ஆர்வலர் யோகநாதன் கலந்து கொண்டு பேசினார். முடிவில் மாணவர் விஜயகாந்த் நன்றி கூறினார்.

22.9.14

---

பருமன், ஆஸ்துமா, இதய நோய், மன அழுத்தம், தூக்கமின்மை, கோபப்படுதல் போன்ற பிரச்சினைகளுக்கு யோகாசனம் மூலமாக தீர்வு காண்பதற்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

உடல் வலிமை மற்றும் பொழிவு பெறுதல், உள்முகப் பயிற்சி, மனதை தூய்மைபடுத்துதல், இயற்கை உணவு, நீர் சிகிச்சை, வெப்ப சிகிச்சை, ஆகாய சிகிச்சை, நினைவாற்றல் உள்ளிட்ட பயிற்சிகள் கற்றுத் தரப்படுகிறது. இதில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இந்த தகவலை யோகா பயிற்சியாளர் சந்திரசேகரன் தெரிவித்து உள்ளார்.


JK TECHNOLOGI-IT TRAINING ACADEMY
JKTechnologi
No: 20, GKD Nagar, Papanayackenpalayam
Coimbatore, Tamilnadu, India-641 037
Web:www.jktechnologi.com
Saraswathi Pooja offer